**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**

எண்.36/வே.து/அ.வே.பொ.ப. /2018-19 புதுவை, நாள் 06-03-2020

## செய்தி குறிப்பு

வேளாண் துறை மூலமாக டிராக்டர், பவர் டில்லர், நெல் நடவு இயந்திரம் உள்ளிட்ட அனைத்து மேம்படுத்தப்பட்ட மற்றும் பாரம்பரிய வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்கி மானியம் பெறுவதற்கான அறிவிக்கை 06-03-2020 அன்று பத்திரிக்கைகள் வாயிலாக வெளியிடப்பட்டது. இம்மானியம் பெற விரும்பும் விவசாயிகள் உரிய விண்ணப்பத்தை வேளாண் துறையின் இணையதளமான https://agri.py.gov.in -ல் இணையிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம், காரைக்கால் / அரசு வேளாண் பொறியியல் பணிமனை, வம்பாகீரப்பாளையம், புதுச்சேரி-1 மற்றும் சம்பந்தப்பட்ட உழவர் உதவியகங்கள் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம், காரைக்கால் / அரசு வேளாண் பொறியியல் பணிமனை அலுவலகம், புதுச்சேரி–ல் 26-03-2020 -க்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நில சான்றிதழ் கிடைக்கப்பெற தாமதமாகும் பட்சத்தில் தற்காலிக ஏற்பாடாக தங்கள் சம்பந்தப்பட்ட உழவர் உதவியகத்தின் வேளாண் அலுவலர்கள் சான்றோ அல்லது விவசாயத்துறையின் மூலமாக வழங்கப்பட்ட விவசாய அடையாள அட்டையின் நகலையோ இணைத்து விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

தங்கள் விண்ணப்பம் தேர்வு செய்யப்பட்ட உடன் நில உரிமை சான்றிதழ் மற்றும் குடியிருப்பு சான்றிதழ் ஆகியவற்றை துணை தாசில்தார் நிலைக்கு கீழ்ப்படாத வருவாய்த்துறை அதிகாரியிடம் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் சமர்பிக்க வேண்டும். சமர்பிக்கத்தவறினால், தங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என இதன் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

**வேளாண் துறை,**
**புதுச்சேரி.**